III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 05-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : பிலால் அகமது | Village | : |
| Father's / Husband's Name | : இக்பால் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.) வாதி 02.03.2011 அன்று ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.75 ஆயிரம் கொடுத்தார். அதனை நான் ஜான்வெஸ்லியிடம் கொடுத்துவிட்டேன். இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்த 75 ஆயிரம் ரூபாயை தவிர்த்து வாதி என்னிடம் வேறு பணம் எதுவும் கொடுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் வாதி எனக்கு ரூ.3 ¼ லட்சம் ஒரு முறை கொடுத்தார். அடுத்த முறை ரூ.1 லட்சம் கொடுத்தார். 3 ¼ லட்ச பணத்தை வாதி எந்த தேதியில் கொடுத்தார் என்றால் அக்ரிமெண்ட் போட்டு இரண்டு வார காலத்தில் இந்த பணத்தை வாங்கினேன். அதன்பிறகு 1 வாரம் கழித்து கூடுதலான 1 லட்சம் ரூபாயை வாதியிடம் வாங்கினேன். இவ்வாறு இரண்டு முறை பணம் வாங்கியதற்கு இரண்டு புரோநோட்டுகளை வாதியிடம் கொடுத்திருக்கின்றேன். இந்த 4 ¼ லட்ச பணத்திற்கு வட்டி எதுவும் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளவில்லை. இந்த 4 ¼ லட்ச பணத்தில் ரூ.1 லட்சம் திரும்ப கொடுத்துவிட்டேன். அந்த ஒரு லட்ச ரூபாய் பணத்தை திரும்ப கொடுத்தபொழுது புரோநோட்டை நான் திரும்ப வாங்கவில்லை. நான் 1 லட்ச ரூபாய் பணத்தை DD ஆக கொடுத்தேன். அந்த DD ன் ஜெராக்ஸ் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் உண்மைதான். அது **பி.த.சா.ஆ.4** (இந்திய சாட்சிய சட்டம் 62 மற்றும் 65 பிரிவுகளுக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. பி.த.சா.ஆ.4 ல் உள்ள கையெழுத்து மனோவாவின் கையெழுத்து கிடையாது. துரைராஜ் ஏற்படுத்தியது. அதில் உள்ள வாசகங்களை நான் தான் எழுதினேன். பி.த.சா.ஆ.4 ல் உள்ள கையெழுத்து மனோவாவினுடையது தானா என்பதை அறிந்து கொள்ள தடய அறிவியல் கூட கையெழுத்து நிபுனருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை எதுவும்

இல்லை. அப்படி போய்விட்டு வந்தால் இது மனோவாவின் கையெழுத்தா இல்லையா என்பது தெரிந்துவிடும் என்றால் ஆமாம் கண்டிப்பாக தெரிந்துவிடும். ஏற்கனவே ஒப்பந்தம் போடும்பொழுது மானோவாவிடம் இருந்து வாங்கிய ரூ.75 ஆயிரம் பணத்தை அவர் கோரியவாரு அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு மனோவா கோரிய ரூ.1.50 லட்சத்தினை DD மூலமாக நான் மானோவாவிற்கு கொடுத்ததற்காக உருவாக்கப்பட்டது தான் பி.த.சா.ஆ.4 ஆவணம் என்றால் நான் அதனை மறுக்கின்றேன். நான் மனோவாவிடம் எதற்காக கடன் வாங்கினேன் என்றால் 2011 ஜுன் மாதம் எனக்கு ஏற்பட்ட திருமணச் செலவிற்காக கடன் வாங்கினேன். என்னுடைய நிச்சயதார்த்தம் 2011 ஆம் ஆண்டு 4 வது மாதம் நடைபெற்றது. என்னுடைய திருமணம் ஜுன் 20 ல் நடைபெற்றது. வாதி தாக்கல் செய்த கூடுதல் பதில் எதிர்வழக்குரையில் வாதி எனக்கு ரூ.3 ¼ லட்சம் மட்டும் தான் கடனாக கொடுத்தார் என்று கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் மானோவாவிடமிருந்து 4 ¼ லட்சம் பணம் வாங்கியதை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் பதில் எதிர்வழக்குரை மற்றும் எனது பதில் அறிவிப்பில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 4 ¼ லட்சம் வாங்கியதை நான் சொல்லவில்லை என்றால் நான் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கினேன். நிலத்திற்காக வாங்கவில்லை. ஆகையால் சொல்லவில்லை. நான் மீதமுள்ள 3 ¼ லட்சத்தை திரும்ப கொடுக்கவில்லை. இதுவரை மனோவா என்னிடம் அந்த பணத்தை திரும்ப கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 2011 ல் நான் வாங்கிய இந்த கடனை இதுவரையில் மனோவா என்னிடம் திரும்ப கேட்கவில்லை என்றால் சரிதான். நான் மனோவாவிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதற்காக தான் அவர் என்னிடம் பணத்தை திரும்ப கேட்கவில்லை என்றால் அதனை நான் மறுக்கிறேன். என்மீது 2 வது பிரதிவாதி ஜான்வெஸ்லி காவல் துறையில் புகார் கொடுத்திருக்கின்றார் என்றால் சரிதான். ஜான்வெஸ்லி என்மீதும், வாதி மற்றும் 4 ஆம் பிரதிவாதி துரைராஜ்க்கு எதிராக ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுத்தார் என்றால் உண்மைதான். 2016 ஆம் ஆண்டு வரை நான் துரைராஜ்ன் கட்டுப்பாட்டில் தான் இருந்தேன். 2016 ஆம் ஆண்டுக்கு பிறகு நான் துரைராஜ்ன் கட்டுப்பாட்டில் இல்லை. வெளியே வந்துவிட்டேன். ஜான்வெஸ்லி கொடுத்த புகாரில் நான் முன்ஜாமின் பெற்றேனா என்றால் ஆமாம் முன்ஜாமின் பெற்றேன் ஆனால் துரைராஜ் தான் இதனை ஏற்பாடு செய்தார். 2016 ஆம் ஆண்டு வரை 4 ஆம்

பிரதிவாதி துரைராஜ் என்னை மிரட்டி, அச்சுறுத்தி, கொலை மிரட்டல் செய்து என்னையும் என்னுடைய அப்பாவையும் கொன்றுவிடுவதாக கூறியும் வழக்கு முடியும் வரை என் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும் என்று மிரட்டினார். 2016 க்கு பிறகு 4 ஆம் பிரதிவாதி என்னை மிரட்டினார் என்று வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது காவல் துறையில் புகாரோ கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. போலிஸ் enquiry ல் சொல்லியிருக்கிறேன். ஜான்வெஸ்லி கொடுத்த புகாரின் மீது நடந்த விசாரணையின் போது போலிசார் என்னை கூப்பிட்டிருந்தார்கள் அப்போது சொல்லியிருக்கின்றேன். இது எந்த வருடம் நடந்திருக்கும் என்றால் 2023 ஆம் ஆண்டு நடந்தது. போலிசார் என்னை விசாரித்தபொழுது எல்லா உண்மைகளும் சொல்லியிருக்கின்றேன். போலிசார் எழுதி இருப்பதில் ஒரு சிறிய பிழை இருக்கின்றது. அது 3 வருடம் 20 லட்சம் என்பதை போலிசார் தவறுதலாக 3 கோடியே 20 லட்சம் எண்ணால் எழுதியிருக்கின்றார்கள். தொகை எழுத்து வடிவில் இல்லை. இந்த பிழை எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் இந்த வழக்கிற்காக நான் case study செய்தபொழுது எனக்கு இது தெரியவந்தது. போலிசார் தயார் செய்த 161(3) வாக்குமூலத்தின் கடைசி பகுதியில் படிக்க கேட்டேன் சரியாக இருந்தது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் நான் அதில் கையெழுத்து இடவில்லை. 02.03.2011 அன்று நானும் வாதியும் சேர்ந்து ஜான்வெஸ்லி, கிறிஸ்டிபெல் மற்றும் 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கோடு ஒரு கிரையம் ஒப்பந்தம் போட்டு வழக்கு சொத்தினை ரூ.20 லட்சத்திற்கு விற்பதாக முடிவு செய்து பதிவு செய்தோம் என்றால் நான் இதனை மறுக்கிறேன். நான், 2 மற்றும் 4 பிரதிவாதிகளை ஏமாற்றி வாதியுடன் ஒப்பந்தம் செய்ததால் தான் 08.04.2011 அன்று 1, 2 ஆம் பிரதிவாதிகள் எனக்கு கொடுத்திருந்த பவர் பத்திரத்தை ரத்து செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. துரைராஜ் தான் மிரட்டி பவர் கேன்சல் பத்திரத்தில் கையெழுத்து போடச் சொன்னார். இது குறித்தும் வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் துறையில் புகாரோ கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலம், என்னுடைய எதிர்வழக்குரை, கூடுதல் பதில் எதிர்வழக்குரை, பதில் அறிவிப்பு ஆகியவற்றிக்கு முரணாக இருப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்றால் நான் இதனை மறுக்கின்றேன். நான் கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்த காலகட்டத்தில் கிரைய ஒப்பந்தம் கட்டாய பதிவு செய்யப்பட வேண்டுமென்ற சட்டம் இல்லை என்றால் இது பற்றி எனக்கு தெரியாது. முதலில்

4 ஆம் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் போட்டுவிட்டு அதனை மறைத்து 02.03.2011 ல் வாதியுடன் சேர்ந்து கொண்டு ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டதால் தான் அதனை நான் பதிவு செய்தேன் என்றால் இதனை நான் மறுக்கின்றேன். வாதியுடன் சேர்ந்து கொண்டு நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் நான் அதனை மறுக்கின்றேன்.

**2 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:- இல்லை**

(அறிவார்ந்த 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது.)